



**அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை**

| | |
|---|---|
| **வெளியீடு** | **ஐக்கிய அரபு அமீரக அரசின்**<br>**இஸ்லாமிய விவகார துறை**<br>(http://www.awqaf.gov.ae) |

**வெள்ளிக்கிழமை ரமளான் பிறை 5 ஹிஜ்ரி 1437**
Friday of Ramadan 5th Hijri 1437
10th June 2016

| | |
|---|---|
| **தலைப்பு:** | **பரிந்துரைக்கும் இரண்டு!** |



| | |
|---|---|
| **தமிழில்** | **மௌலவி, அப்சலுல் உலமா**<br>**புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.**<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்( ) மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | பரிந்துரைக்கும் இரண்டு! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் இந்த திருக்குர்ஆன் வேதத்தை நேர்வழி காட்டுவதற்காகவும், பரிந்துரை செய்வதற்காகவும் வைத்துள்ளான். இந்த வேதத்தை ஒளி நிறைந்ததாகவும், பிரகாசமானதாகவும் வைத்திருக்கிறான். நன்கு சிந்தித்து பார்ப்பவர்களுக்கு இதில் பல படிப்பினைகள் உள்ளன. விரிவான பார்வையுள்ளவர்களுக்கு இதில் நேரான வழி இருக்கிறது.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(2:1-2)

الم* ذَلِكَ الْكِتَابُ لاَ رَيْبَ فِيهِ هُدًى لِلْمُتَّقِينَ

“அலிஃப்; லாம்; மீம். இதுதான் வேதநூல். இதில் சந்தேகமேயில்லை. இறை அச்சம் உடையவர்களுக்கு (இது) நேரான வழியைக் காட்டும்”

**நோன்பாளிகளே**! நமது நோன்புகளையும், தொழுகைகளையும், மற்ற அனைத்து நற்செயல்களையும், ஓதுதலையும் ஏற்றுக் கொள்வதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் மன்றாடி துஆச் செய்வோம். இறைவன் தனது வேதத்தைப் பற்றி பின்வருமாறு கூறுகிறான்: (41:41-42)

وَإِنَّهُ لَكِتَابٌ عَزِيزٌ* لاَ يَأْتِيهِ الْبَاطِلُ مِنْ بَيْنِ يَدَيْهِ وَلاَ مِنْ خَلْفِهِ تَنْزِيلٌ مِنْ حَكِيمٍ حَمِيدٍ

“ஏனென்றால்) நிச்சயமாக இது மிக கண்ணியமான வேதமாகும். இதற்கு முன்னும் சரி, இதற்குப் பின்னும் சரி உண்மைக்கு மாறான யாதொரு விஷயமும் (திருக்குர்ஆனாகிய) இதனை (அணுகவே) அணுகாது. மிக்க புகழும் ஞானமும் உடையவனால் (இது) இறக்கப்பட்டது”

இந்த வேதம் அல்லாஹ்வுடைய பேச்சாகும், இதன் ஒளி மிகவும் தெளிவானதாகும். நமக்கு முன்னர் நடந்தவைகளைப் பற்றிய செய்திகளும், நமக்கு பின்னர் நடக்க இருப்பவைகளைப் பற்றிய அறிவிப்புகளும் இந்த வேதத்தில் உள்ளன. இந்த வேதத்தில் நம்முடைய உயர்வும் கண்ணியமும் இருக்கிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (21:10)

لَقَدْ أَنْزَلْنَا إِلَيْكُمْ كِتَابًا فِيهِ ذِكْرُكُمْ أَفَلاَ تَعْقِلُونَ

“உங்களுக்குப் (போதுமான) நல்லுபதேசங்கள் உள்ள வேதத்தையே நிச்சயமாக உங்களுக்கு அருளியிருக்கின்றோம். இவ்வளவு கூட நீங்கள் அறிந்துகொள்ள வேண்டாமா?”

“உங்களுக்கு நல்லுபதேசங்கள் அதாவது உங்களுடைய சிறப்புகள் இந்த வேதத்தில் உள்ளன” என்று இந்த வசனத்திற்கு இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள். ((334 /5) : تفسير ابن كثير)

நாம் புனித ரமளான் மாதத்தில் இருக்கிறோம், இது குர்ஆனுடைய மாதமாகும். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் இந்த வேதத்தை ரமளான் மாதத்திலே லவ்ஹுல் மஹ்பூலில் இருந்து முதல் வானத்திற்கு இறக்கி வைத்தான்.((198/1) : والبغوي (501/1) : تفسير ابن كثير )

இதனைப் பற்றி இறைவன் கூறுகிறான்: (44:3)

إِنَّا أَنْزَلْنَاهُ فِي لَيْلَةٍ مُبَارَكَةٍ إِنَّا كُنَّا مُنْذِرِينَ

“நிச்சயமாக இதனை மிக்க பாக்கியமுள்ள ("லைலத்துல் கத்ரு" என்ற) ஓர் இரவில் ((முதல் முறையாக) இறக்கி வைத்து, நிச்சயமாக நாம் (இதன் மூலம்) அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றோம்”

நற்பாக்கியம் நிறைந்த இந்த புனித இரவை இறைவன் தேர்ந்தெடுத்து புனித வேதத்தை இறக்கினான். இந்த இரவு மென்மேலும் பல பாக்கியங்களை பெற்றுள்ளது. அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்: (97:1)

إِنَّا أَنْزَلْنَاهُ فِي لَيْلَةِ الْقَدْرِ

“நிச்சயமாக நாம் இந்தக் குர்ஆனை (மிக்க கண்ணியமுள்ள) லைலத்துல் கத்ர் என்னும் ஓர் இரவில் ((முதலாவதாக) இறக்கி வைத்தோம்”

இறைவனின் கட்டளைகளை ஏற்று வானவர் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பூமியில் வந்திறங்கினார்கள். இறைவனின் வேத மொழிகளால் இந்த பூமி சிறப்படைந்தது. இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களோடு சேர்ந்து இந்த ரமளான் மாதத்தில் திருக்குர்ஆனை ஓதுவார்கள். (1902 :البخاري)

இதனைப் பற்றி இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள்: ரமளான் மாதத்தில் ஒவ்வொரு இரவிலும் ஹஜ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்


www.sunnathwaljamath.com

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சந்திப்பார்கள். அப்போது அந்த மலக்கிடம் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருக்குர்ஆனை ஓதிக் காட்டுவார்கள். (1902 :البخاري)

திருக்குர்ஆனிற்கும் நோன்பிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இவ்விரண்டும் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பை பெற்றுள்ளன. நோன்பு வைத்தவருக்கு அவர் வைத்த நோன்பும், திருமறை ஓதி வருபவருக்கு அந்த திருமறையும் இறைவனிடம் பரிந்துரை செய்யும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الصِّيَامُ وَالْقُرْآنُ يَشْفَعَانِ لِلْعَبْدِ, يَقُولُ الصِّيَامُ: أَيْ رَبِّ, إِنِّي مَنَعْتُهُ الطَّعَامَ وَالشَّهَوَاتِ بِالنَّهَارِ فَشَفِّعْنِي فِيهِ, وَيَقُولُ الْقُرْآنُ: رَبِّ, إِنِّي مَنَعْتُهُ النَّوْمَ بِاللَّيْلِ فَشَفِّعْنِي فِيهِ, فَيُشَفَّعَانِ

“நோன்பும் குர்ஆனும் ஒரு அடியானுக்காக (மறுமையில் இறைவனிடம்) பரிந்துரை செய்யும். அப்போது நோன்பு, “என் இறைவா! உணவு சாப்பிடாமல் இந்த அடியாரை நான் தடுத்து வைத்திருந்தேன், பகலில் உடல் இன்பங்களை விட்டு இந்த அடியாரை தடுத்து வைத்திருந்தேன், எனவே நான் இவருக்காக பரிந்துரை செய்வதை நீ ஏற்றுக்கொள்!” என்று கூறும். மேலும் திருக்குர்ஆன், “என் இறைவா! இரவில் இவரை நான் தூங்கவிடாமல் தடுத்து வைத்திருந்தேன், எனவே இவருக்காக நான் பரிந்துரை செய்வதை நீ ஏற்றுக்கொள்” என்று கூறும். இவ்விரண்டின் பரிந்துரையும் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படும். (199/11 :أحمد)

பொதுவாக நோன்பு காலங்களில் இந்த திருக்குர்ஆன் பெரும் பகுதியை பிடித்துக் கொள்கிறது. செய்யப்படும் நற்செயல்களில் திருக்குர்ஆன் சார்ந்த அமல்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. நோன்பு காலங்களில் நற்செயல்களில் ஈடுபடும் ஸாலிஹான அடியார்களிடம் இந்த திருக்குர்ஆன் மேலான முக்கியத்துவத்தை பெற்றுள்ளது.

ஸய்யிதுனா உஸ்மான் இப்னு அப்பான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள், “ஒவ்வொரு நாள் பகலிலும் இரவிலும் இறைவனின் பேச்சாகிய வேதத்தை பார்ப்பது எனக்கு பிடிக்கும். அதனை பார்க்காமல் எந்த ஒரு தினத்தையும் கழிக்க நான் விரும்புவதில்லை” ( فضائل عثمان بن عفان : لعبد الله بن أحمد بن حنبل، ص: 116)

காரணம் திருக்குர்ஆனை பார்ப்பது மிகவும் விரும்பத்தக்க ஒரு வணக்கமாகும். அதனை தொட்டு ஓதுவதின் மூலம் ஓதிய நன்மையும், புறக்கண்களால் பார்க்கும் நன்மையும் ஒரு சேர கிடைக்கும். (100 :التبيان في آداب حملة القرآن للنووي ص)

இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் நோன்பு காலங்கள் வந்துவிட்டால் எப்போதும் திருக்குர்ஆனின் தொடர்பிலேயே இருப்பார்கள். (171 :لطائف المعارف لابن رجب، ص)

**இறைவனின் வேதத்தை ஓதுபவர்களே**! ரமளான் மாதத்தில் திருக்குர்ஆனோடு நமது வாழ்வை நாம் எப்படி அமைத்துள்ளோம்? திருமறையை அனுதினமும் ஓதிவர வேண்டும், மிகவும் நேர்த்தியான முறையில் சப்தமாகவும் ஓத வேண்டும். இறைவனின் பேச்சுகள் அடங்கிய இந்த வேதத்தில் நாம் உண்மையான அக்கறை செலுத்த வேண்டும், நம்முடைய உலகியல்


www.sunnathwaljamath.com

பணிகள் அதனைவிட்டு தடுக்காமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனில் உள்ள அர்த்தங்களை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அவற்றை நாம் தெளிவாக நாம் புரிய முற்படும்போது நம்முடைய எண்ணம் நிம்மதி அடைகிறது, சிந்தனைகள் உற்சாகம் கொள்கிறது. பொதுவாக இந்த திருக்குர்ஆனை ஓதினாலும் அல்லது காதால் கேட்டாலும் அதனால் பல நல்ல விளைவுகள் ஏற்படும். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (39:23)

اللَّهُ نَزَّلَ أَحْسَنَ الْحَدِيثِ كِتَابًا مُتَشَابِهًا مَثَانِيَ تَقْشَعِرُّ مِنْهُ جُلُودُ الَّذِينَ يَخْشَوْنَ رَبَّهُمْ ثُمَّ تَلِينُ جُلُودُهُمْ وَقُلُوبُهُمْ إِلَى ذِكْرِ اللَّهِ

“அல்லாஹ் அழகான விஷயங்களையே (இந்த) வேதத்தில் இறக்கி இருக்கின்றான். (இதிலுள்ள வசனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாமல்) ஒன்றை மற்றொன்று ஒத்ததாக (இருப்பதுடன், மனதில் பதிவதற்காக ஒரே விஷயத்தை) மென்மேலும் (பல வகையில்) கூறப்பட்டுள்ளது. எவர்கள் தங்கள் இறைவனுக்குப் பயப்படுகிறார்களோ, (அவர்கள் அதனைக் கேட்ட மாத்திரத்தில்) அவர்களுடைய உரோமம் சிலிர்த்து விடுகிறது. பின்னர், அவர்களுடைய தேகங்களும், உள்ளங்களும் இளகி அல்லாஹ்வைத் தியானம் செய்ய ஆரம்பிக்கின்றன”

வேத வரிகளை நாம் ஓத ஓத அதனால் நம்முடைய இறைநம்பிக்கை அதிகரிக்கிறது. பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (8:2)

إِنَّمَا الْمُؤْمِنُونَ الَّذِينَ إِذَا ذُكِرَ اللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ وَإِذَا تُلِيَتْ عَلَيْهِمْ آيَاتُهُ زَادَتْهُمْ إِيمَانًا وَعَلَى رَبِّهِمْ يَتَوَكَّلُونَ

“உண்மையான நம்பிக்கையாளர்கள் யாரென்றால், அல்லாஹ்வை (அவர்கள் முன்) நினைவு கூறப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் பயந்து நடுங்கிவிடும்; அல்லாஹ்வுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப் பட்டால் அவர்களுடைய நம்பிக்கை (மென்மேலும்) அதிகரிக்கும். அவர்கள் தங்கள் இறைவனையே முற்றிலும் நம்பியிருப்பார்கள்”

திருக்குர்ஆனில் உள்ள “தாஹா” என்கிற 20 வது அத்தியாம் ஓதப்படுவதை காதால் கேட்ட பிறகுதான் ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள் என்பது வரலாறு. ((241/1) : دلائل النبوة لأبي نعيم)

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (20:1-2)

طه* مَا أَنزَلْنَا عَلَيْكَ الْقُرْآنَ لِتَشْقَى

“தாஹா. (நபியே!) நீங்கள் கஷ்டத்தை அடைவதற்காக இந்தக் குர்ஆனை நாம் உங்கள் மீது இறக்கவில்லை”

திருக்குர்ஆனை இறக்கியதன் மூலம் இறைவன் மனிதர்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வு தந்தான், மேலும் அவர்களுக்கு ஈடேற்றமான வாழ்வை வழங்கினான். எல்லா விதமான வீழ்ச்சியை விட்டும் அவர்களை காப்பாற்றினான்.

ஹஜ்ரத் புளைள் இப்னு இயாள் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பின்வரும் வசனத்தை கேட்ட பிறகுதான் முழுமையாக மனம் வருந்தி, இறைவனிடம் பாவமன்னிப்பு கேட்டார்கள்: (57:16)

أَلَمْ يَأْنِ لِلَّذِينَ آمَنُوا أَنْ تَخْشَعَ قُلُوبُهُمْ لِذِكْرِ اللَّهِ وَمَا نَزَلَ مِنَ الْحَقِّ

“நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளங்கள் அல்லாஹ்வை நினைத்தும், அவன் இறக்கிவைத்த சத்திய (வசன)ங்களைக் கவனித்தும் பயப்படக்கூடிய நேரம் (இன்னும்) வரவில்லையா? இவர்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களைப் போல், இவர்களும் ஆகிவிடவேண்டாம். (இவ்வாறே) அவர்கள் மீதும் ஒரு காலம் சென்று, அவர்களுடைய உள்ளங்கள் கடினமாக இருகி விட்டன. அவர்களில் பெரும்பாலானவர்கள் பாவிகளாகி விட்டனர்”

அதன் பிறகு அவர்கள் நேர்வழி காட்டும் ஓர் இறைநேசராக வாழ்ந்தார்கள். பல்வேறு வகையான மனிதர்களை பல்வேறு சூழ்நிலைகளில் நேரான பாதையை நோக்கி இந்த திருமறைக் குர்ஆன் அழைத்து வந்துள்ளது. குர்ஆனின் உண்மை பொருளை அவர்களின் உள்ளத்தில் இறைவன் உதிக்கச் செய்து நேரான பாதையில் அவர்களை அழைத்து வருகிறான். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (59:21)

لَوْ أَنزَلْنَا هَذَا الْقُرْآنَ عَلَى جَبَلٍ لَّرَأَيْتَهُ خَاشِعاً مُتَصَدِّعًا مِنْ خَشْيَةِ اللَّهِ

“(நபியே!) யாதொரு மலையின் மீது நாம் இந்தக் குர்ஆனை இறக்கி வைத்திருந்தால், அது அல்லாஹ்வின் பயத்தால் நடுங்கி வெடித்துப் பிளந்து போவதை நிச்சயமாக நீங்கள் காண்பீர்கள். மனிதர்கள் சிந்தித்து பார்ப்பதற்காக இவ்வுதாரணங்களை நாம் கூறுகின்றோம்”

அதாவது எல்லாம் வல்ல அல்லாஹ்வுடைய அச்சத்தால் கூனி குறுகி நடங்கி போய்விடும். திருமறையை ஓதுவதற்கு எண்ணற்ற பல நன்மைகளும், சிறப்புகளும் உள்ளன. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ قَرَأَ حَرْفًا مِنْ كِتَابِ اللَّهِ فَلَهُ بِهِ حَسَنَةٌ، وَالْحَسَنَةُ بِعَشْرَةِ أَمْثَالِهَا أَمَا إِنِّي لاَ أَقُولُ: (الم) حَرْفٌ، وَلَكِنْ أَلِفٌ حَرْفٌ، وَلاَمٌ حَرْفٌ، وَمِيمٌ حَرْفٌ

“யார் வேதத்தில் இருந்து ஒரே ஒரு எழுத்தை ஓதுகிறாரோ, அவருக்கு அதற்கான நன்மை கிடைக்கும். அந்த நன்மை பத்து மடங்காக இருக்கும். அலீப் லாம் மீம் என்பதை நான் ஓர் எழுத்தாக கருத மாட்டேன், ஆனால் அலீப் ஓர் எழுத்து, லாம் ஓர் எழுத்து, மற்றும் மீம் ஓர் எழுத்தாகும்” (الترمذي: 2910)

எனவே ஒவ்வொரு எழுத்துக்களையும் நாம் கவனமாக ஓத வேண்டும். அதன் வார்த்தைகளை நன்கு கவனமுடன் சிந்திக்க வேண்டும். இதனால் நமக்கு பன்மடங்கு கூலி கிடைக்கும். இறையருள் என்றும் நம்மிடையே நிறைந்திருக்கும். எப்போதும் நாம் நேரான பாதையில் வீற்றிருப்போம். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (7:52)



www.sunnathwaljamath.com

وَلَقَدْ جِئْنَاهُمْ بِكِتَابٍ فَصَّلْنَاهُ عَلَى عِلْمٍ هُدًى وَرَحْمَةً لِقَوْمٍ يُؤْمِنُونَ

“நிச்சயமாக நாம் அவர்களுக்கு ஒரு வேதத்தைக் கொடுத்திருந்தோம். அதில் ஒவ்வொன்றையும் ஞான முறையில் விவரித்திருக்கின்றோம். (அன்றி அது) நம்பிக்கை கொண்ட மக்களுக்கு நேரான வழியாகவும் அருளாகவும் இருக்கின்றது”

அதாவது, உங்களுக்கு நேர்வழியை காட்டுவதற்காகவும், கிருபைகளை வழங்குவதற்காகவும் இதனை நாம் வைத்துள்ளோம். ((217/7) : تفسير القرطبي)

**திருக்குர்ஆனோடு தொடர்பில் இருக்கும் நோன்பாளிகளே**! திருக்குர்ஆனை ஓதுவதற்கும், மனனம் செய்வதற்கும், அழகிய முறையில் ஓதுவதை கேட்பதற்கும் நாம் நமது நேரங்களை சரிவர திட்டமிட்டிருக்கிறோமா என்பதை கவனிக்க வேண்டும். குர்ஆன் ஓதுவதற்கான அதிக நேரங்கள் நமக்கு கிடைக்கும். உதாரணமாக பாங்கு சொன்னதிலிருந்து இகாமத் சொல்வது வரை உள்ள நேரம், ஒவ்வொரு தொழுகையும் முடிந்த பிறகு கிடைக்கும் சிறிது நேரம் இப்படி கிடைக்கும் சிறிது நேரங்களையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதை நாம் நிரந்தரமாக கடைபிடித்தால் நிச்சயம் நமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

فَقَدْ سُئِلَ النَّبِيُّ صلى الله عليه و سلم : أَيُّ الأَعْمَالِ أَحَبُّ إِلَى اللَّهِ؟ قَالَ:أَدْوَمُهَا وَإِنْ قَلَّ.

وَقَالَ صلى الله عليه و سلم : اكْلَفُوا مِنَ الأَعْمَالِ مَا تُطِيقُونَ

“நற்செயல்களில் அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானது எது?” என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு அவர்கள் “(எண்ணிக்கையில்) குறைவாக இருந்தாலும், (தொடர்ந்து செய்யப்படும்) நிலையான நற்செயலே” என்று விடையளித்தார்கள். மேலும், “நற்செயல்கள் புரிவதில் இயன்றவரை அதன் எல்லையைத் தொடமுயலுங்கள்” என்றும் கூறினார்கள். (6465: البخاري)

அதாவது, உங்களுக்கு எந்த அளவிற்கு முடியுமோ, அது சிறிய நற்செயலாக இருந்தாலும் அதனை தொடர்ந்து செய்து வாருங்கள். ஒரு பொழுதும் அதனை விட்டுவிடாமல் கடைப்பிடித்து வாருங்கள் என்பது இதன் பொருளாகும்.

திருக்குர்ஆனை மனனம் செய்வதற்கும், ஏற்கனவே மனனம் செய்ததை ஓதி பார்ப்பதற்கும் பொருத்தமான நேரம் ஸுப்ஹ் தொழுத பிறகு கிடைக்கும் நேரமாகும். காரணம் இந்த நேரத்தில் எந்த பரபரப்பும் இல்லாமல் சிந்தனை மிகவும் அமைதியாக இருக்கும். பொதுவாக இந்த நேரங்களில் வேறு எந்த உலகியல் தொந்தரவும் வராது. உடலும் மிக ஆரோக்கியமாகவும் குளுமையாகவும் இருக்கும். இந்த நேரத்தில் மனனம் செய்தால் மனதில் மிக துல்லியமாக பதிந்துவிடும், அவ்வளவு எளிதில் மறக்காது.

குடும்ப உறுப்பினர்களை ஒரே சபையில் ஒன்று கூட்டி திருக் குர்ஆன் தொடர்பான நற்செயல்களில் ஈடுபட வேண்டும். இப்படி செய்வதால் வீடெங்கும் ஈமானின் ஒளி



www.sunnathwaljamath.com

நிறைந்திருக்கும். அமைதி பரவியிருக்கும். இறையருள் முழுமையாக இறங்கியிருக்கும். அனைவரும் கூட்டாக ஒரு நற்காரியத்தில் ஈடுபடும்போது ஒவ்வொரு தனிமனித உள்ளங்களில் ஆர்வம் அதிகரிக்கும். தொடர்ந்து இதனை கடைபிடிக்க வேண்டும் என்கிற வேட்கை பிறக்கும்.

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் ரமளான் மாதத்தில் தன்னுடைய குடும்பத்தார்களை எழுப்பி நற்செயல்களில் ஈடுபட ஆர்வமூட்டுவார்கள். கூட்டாக செய்வதை வழமையாக ஆக்கிவிட்டால் பின்வரும் காலங்களில் எந்த தடைகளையும் தாண்டி வழமையாக நடைபெறும். இதனால் அமல் செய்வதில் உள்ள முக்கியத்துவத்தை அடுத்த தலைமுறைக்கு ஒரு வாழ்வியல் வழமையாகவே நிலைநிறுத்திவிட முடியும்.

யா அல்லாஹ்! இரவுகளிலும், காலையிலும் மாலையிலும் நாங்கள் தொடர்ந்து குர்ஆன் ஓதும் பாக்கியத்தை எங்களுக்கு தருவாயாக! நீ பொருந்திக் கொள்ளும் விதமாக நாங்கள் குர்ஆன் ஓத உதவி புரிவாயாக!! திருக்குர்ஆனும், நோன்பும் எங்களுக்காக உன்னிடம் பரிந்துரை செய்யும் வாய்ப்பையும் நீ தந்தருள்வாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! அல்லாஹ்விற்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள். அவனுக்கு தொடர்ந்து கீழ்படிந்து நடங்கள். திருக்குர்ஆனின் வழியை பெற்று நேரான வழியை அடையுங்கள். யார் திருமறைக் குர்ஆன் மூலம் நேரான பாதையை பெற்றுக் கொள்கிறாரோ நிச்சயம் அவர் உண்மையான பாதையை அடைந்தவராகிறார். யார் திருக்குர்ஆனை பரந்த மனப்பான்மையோடு ஆழமாக சிந்திக்கிறாரோ நிச்சயம் அவருடைய சிந்தனை தெளிவு பெற்றுவிடும். இந்த மாதத்தில் உள்ள பெரும்பாலான நேரங்களில் திருக்குர்ஆனை ஓதுங்கள். உங்களுடைய குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுங்கள். அது நம்முடைய கடமையாகும்.

திருக்குர்ஆன் தொடர்பான நற்செயல்களில் நம்முடைய ஐக்கிய அரபு அமீரக அரசு பல்வேறு வகையில் ஈடுபடுகிறது. திருக்குர்ஆனின் முக்கியத்துவத்தை இன்றைய தலைமுறைக்கும், நாளைய தலைமுறைக்கும் எடுத்துச் செல்வதில் அதீத அக்கறை காட்டுகிறது. எனவேதான் சிறியவர்கள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் என பல்வேறு பிரிவில் திருக்குர்ஆன் மனனம் செய்யும் மையங்கள் நிறுவப்பட்டு வெகு சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. சர்வதேச அளவில் திருக்குர்ஆன் தொடர்பான போட்டிகளும் நடத்தப்படுகின்றன. அவ்வாறு அந்த போட்டியில் பங்கு பெறுபவர்களை உற்சாகப்படுத்தும் விதமாக பரிசளிக்கப்படுகின்றன.

அதிகமான குர்ஆன் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. எங்கும் திருக்குர்ஆன் நிறைந்திருக்க வேண்டும், மக்களின் பார்வையிலும் கவனத்திலும் இருக்க வேண்டும் என்பதற்காக இதனை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. திருமறைக்கென தனியாக ஒரு பண்பலை வரிசையை தொடங்கி, அந்த மூலம் திருக்குர்ஆன் தொடர்பான பாடங்கள், ஓதும் முறைகள், சந்தேகங்கள், பொருள் விளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பபடுகின்றன. இது எப்போதும் நம்மோடு இருக்கும் வசதியாகும். இதனால் மனம் குளிர திருமறையை கேட்கும் பலனை அடைகிறோம்.

“வாசிக்கும் தேசம்” (**Reading Nation**) என்கிற ஒரு பிராச்சாரத்தை நம்முடைய ஐக்கிய அரபு அமீரக அரசு தொடங்கியுள்ளது. இதன் மூலம் ஐம்பது லட்சம் நூல்களை அச்சடித்தும், ஒன்று

திரட்டியும், நம் தேசத்தின் சார்பாக இவ்வுலகிற்கு வழங்கப்பட இருக்கின்றன. அனைவரும் படித்து அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது. ரமளான் மாதத்தில் வாசிப்பதற்கு மிகச் சிறந்த நூல் அல்லாஹ்வுடைய வேதமாகும். அதனை ஓதுவதோடு அதன் பொருளை உணர்ந்து, ஆழமான கருத்துக்களையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்த்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய

கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!



www.sunnathwaljamath.com

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).